DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

C.C.No. 1 - 2022

Deposition of Witness for P.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அருண்குமார் மகேஷ் | **தாலுகா** | : | ராஜபாளையம் |
| **த.பெ.** | : | பாலகிருஷ்ணன் | **தொழில்** | : | வங்கி அதிகாரி |
| **ஊர்** | : | ராஜபாளையம் | **வயது** | : | 39 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இராஜபாளையம் கமர்ஷியல் கிளையில் துணை மேலாளராக கடந்த 6 மாதங்களாக பணிபுரிகிறேன். எனக்கு வழக்கு விபரங்கள் கோப்பின் அடிப்படையில் தெரியும். நான் வங்கியில் துணை மேலாளர் என்பதால் எனக்கு வங்கி சார்பாக சாட்சியம் அளிக்க அதிகாரம் உண்டு. நான் புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு என் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். புகார்தாரர் தரப்பு சான்றாவணமாக கீழ்க்கண்ட ஆவணங்களை பதிய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | தன்மை |
|---|---|---|---|
| 1 | 13.11.2019 | காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை | அசல் |
| 2 | 14.11.2019, 15.11.2019 | புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீதுகள் (2 எண்ணம்) | அலுவலக நகல்/ அசல் |
| 3 | 16.11.2019 | எதிரி நிறுவனம் சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| 4 | 26.11.2019 | எதிரி புகார்தாரர் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அஞ்சல் உறைகள் | அசல் |
| 5 | 01.07.2019 முதல் 04.07.2019 வரை | எதிரி எங்கள் வங்கியில் பராமரித்து வந்த வங்கி கணக்கு பட்டியல் | அசல் |

புகார்தாரர் தரப்பில் காசோலையின் நகல் தாக்கல் செய்யப்பட்டு அதனை நீதிமன்றம் புகார்தாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதி கேட்டு

மனு தாக்கல் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் அந்த மனுவை தாக்கல் செய்ய கால அவகாசம் கோறப்பட்டது. எனவே, முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

For STATE BANK OF INDIA

Deputy
~~Assistant General~~ Manager,
Commercial Branch, Rajapalayam-4059

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

17/2/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.